

# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்கள வீரர்களாக இளைஞர் அணியினர் செயலாற்றும் வகையில், மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவுள்ளோம். மார்ச் 24, மற்றும் 25 ஆகிய தேதிகளில் மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெற உள்ள இந்தக்கூட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு:–

**24.3.2026 செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | தேனி, திண்டுக்கல் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பி.எஸ்.என்.ஏ.மஹால், ரவுண்ட் ரோடு, திண்டுக்கல். |
| மாலை 3.00 மணி | மதுரை, விருதுநகர் மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஐடா ஸ்கட்டர் அரங்கம், சிந்தாமணி, மதுரை. |
| மாலை 6.00 மணி | இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ராஹா பேலஸ், கீழகண்டனி, மானாமதுரை சாலை, சிவகங்கை. |

**25.3.2026 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருநெல்வேலி - கன்னியாகுமரி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | மூன் மஹால், என்.ஜி.ஓ. குடியிருப்பு, பாளையங்கோட்டை. |
| மாலை 3.00 மணி | தூத்துக்குடி - தென்காசி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஸ்ரீ நவீரா பேலஸ், கோவில்பட்டி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 21.3.2026

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி

# திறன் மேம்பாடு பயிற்சிகளை ஊக்குவிக்கும் வகையில், ஒன்றிய அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி,மார்ச். 24-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் 18 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன் படுத்துவதன் மூலம், திறன் மேம்பாடு பயிற்சிகளை தொழிலாளர்களுக்கு அளிக்கும் வகையில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டு துறையில் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதனால் மற்ற துறைகளிலும் பயன்பாடு கிடைத்துள்ளதா? என்றும் தொழில் முனைவோர் உரிய பயன்பாட்டை அடைந்துள்ளனரா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

திறன் மேம்பாட்டுத் துறையின் வழிகாட்டுதலின்படி 36 தயாரிப்பு துறைகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதால் தொழிலாளர்களின் மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது என்றும், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டம், ஜன சிக்சான் திட்டம், தேசிய பழகுநர் மேம்பாட்டு திட்டம், கைவினைஞர்கள் பயிற்சி திட்டம் ஆகியன தொழிற் பயிற்சி நிலையங்கள் இணைந்து நடத்தப்படுவதால் திறன்மிக்க தொழிலாளர்கள் தொடர்ந்து அனைத்து தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது என்றும், 2,595 கல்வித் தகுதிகள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டு உள்ளது என்றும், இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், தொழிலாளர் துறையின் தலைமை பயிற்சி இயக்குநர் செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில் நுட்பம், ஆளில்லா விமானங்கள், சைபர் பாதுகாப்பு போன்ற புதிய துறைகளும் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளார் என்றும், 36 தயாரிப்பு துறை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனர் என்றும், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டத்தின்படி 45 சதவீத தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு அடைந்துள்ளது என்றும், 50 சதவீத தொழிலாளர்களுக்கு வருமானத்தில் உயர்வு அதிகரித்துள்ளது என்றும், ஜன் சிக்சான் திட்டத்தின் கீழ் 32 இலட்சம் தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர் என்றும், தேசிய பழகுநர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 35 இலட்சம் தொழில் பழகுநர்கள் பயன் அடைந்துள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.





கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் வடக்கு பகுதி கழக செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம், வெண்ணைமலை கற்பகம் மகாலில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். எம்.எல்.ஏக்கள் ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், பகுதி கழக செயலாளர் வெங்கமேடு பாண்டியன், எம்.எஸ்.கே. கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, பாரத், காலனி செந்தில் மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது!

திருச்சி, மார்ச். 24-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட பாக முகவர்கள் (Booth Agents) ஆலோசனைக் கூட்டம் காட்டூர் மஞ்சத்திடல் பாலம் அருகில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர், மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், தொகுதி பார்வையாளர் மணிராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன், நகர கழகச் செயலாளர் காயம்பு பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு

ஏராளமான பாக முகவர்கள் கலந்து கொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

கூட்டத்தில் பாக முகவர்களிடையே உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தேர்தல் களப்பணிகள் குறித்தும், மக்கள் தொடர்பின் அவசியம் குறித்தும் விரிவான ஆலோசனைகளை அமைச்சர் வழங்கினார்.

அவர் பேசியதாவது: “கழக அரசின் சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சேர்ப்பது பாக முகவர்களின் முதன்மையான கடமையாகும். அந்தந்தக் குடும்பத்தினர் அரசின் எந்தெந்தத் திட்டங்கள் மூலம் நேரடியாகப் பயன் பெற்றுள்ளனர் என்பதை அடையாளம் கண்டு, அவர்களிடம் எளிய முறையில் விளக்கிப் பேசி மக்களுடன் கலந்துரையாட வேண்டும்.” எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும், திருவெறும்பூர் தொகுதியில் மட்டும் நிறைவேற்றப்பட்டுள்ள எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளைப் பட்டியலிட்டு, அவற்றை மக்களிடம் எடுத்துக் கூறி வாக்குகளைச் சேகரிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.







கோவை மாநகர் மாவட்டக் கழக அலுவலகத்தில், கோவை மாநகர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் டாக்டர். ஆர். மகேந்திரன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மறை, மாநகர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆர்.கே.சுரேஷ்குமார் உள்பட பகுதி கழக பொறுப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மயிலாடுதுறை மத்திய, வடக்கு ஒன்றியங்கள் மற்றும் மணல்மேடு பேரூர் ஆகியவற்றின் கழக செயல்வீரர்கள் மற்றும்வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) கூட்டம் பல்லவராயன்பேட்டையில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பேசினார். உடன் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரபாண்டியன்,மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை. சௌமியன், மாவட்டக் கழக துணை செயலாளர் எஸ்.செல்வமணி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி சத்தியசீலன் ஒன்றிய கழக செயலாளர்கள் என் இனிய பெருமாள், ஞான இமய நாதன், மணல்மேடு பேரூர் செயலாளர் என்.அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் காலி ஆ.காந்தி மற்றும் பலர் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்
## மார்ச் 24 (2007)



தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வோளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.